**சமூக பாதுகாப்பு செயற்திட்டம் கூறு 2 & 3.2 இன் - 2025**

-----------------------------------------------------------------------------------------

சமூக பாதுகாப்பு செயற்திட்டத்தின் கூறு 2 & 3.2 இன் 2024 திசெம்பர் 01 தொடக்கம் 2025 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றுக்கிடையே 2023 செப்தெம்பர் 23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் 7363 - எல்கே ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்தரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் படி, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு இத்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் இச்செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவராகவும் உள்ளன.

ஏழைகள் மற்றும் நலிவுற்றோருக்குச் சிறந்த இலக்கிடப்பட்ட வருமானம் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதிலும், சமூகப் பாதுகாப்பு அமைப்பின் தொழிற்பாட்டை மேம்படுத்துவதிலும் இலங்கைக்கு உதவுவதே இச்செயற்திட்டத்தின் நோக்கமாகும். இச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஏழை மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான முன்னோடித் திட்டம் (கூறு 2) மற்றும் செயற்திட்ட நிர்வகிப்பு (கூறு 3.2) எனும் 2 கூறுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன்

கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 60,000 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியனானது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. அதில் ரூபா 2,400 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 8 மில்லியன் மற்றும் ரூபா 260 மில்லியன் தொகையானது மேற்சொன்ன 2 கூறுகளுக்காகவும் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2023 திசெம்பர் 14 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2027 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட்ட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் 2024 திசெம்பர் 01 தொடக்கம் 2025 திசெம்பர் 31 வரையிலான நிதிச்செயலாற்றல்க் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| I | குழுப் பொருளாதார இடைச்சேர்க்கைக் கையேட்டின் (PEIM) மானிய உடன்படிக்கையின் பிரிவு 3 இன் இணைப்பு 4 | மானிய வழங்கலின் போது, பயனாளி தனக்குக் கிடைத்த பணத்தை வணிக/வேலைவாய்ப்புத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தவும், மானியம் பெறப்பட்ட திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் செலவழிக்கப்பட்ட பணத்திற்கான பற்றுச்சீட்டுக்களுடன் செலவின அறிக்கையையும் சமர்ப்பிக்க ஒப்புக்கொள்கிறார். இருப்பினும், குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் மொத்த முற்பணத் தொகையான ரூபா.167.10 மில்லியனில், ரூபா.19.65 மில்லியன் முற்பணம் தொடர்பான செலவின அறிக்கை மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அதன்படி, முற்பணங்களைத் தீர்ப்பதில் ஏற்பட்ட தாமதங்கள் முக்கியமாக அமுலாக்கத்தின் போது பின்பற்றப்பட்ட உள் நிர்வாக ஏற்பாடுகள் மற்றும் செயல்பாட்டு நடைமுறைகளால் விளைந்தவை என அடையாளம் காணப்பட்டுள்ளது. 2026 மே 31 ஆம் திகதியிலுள்ளவாறு 2025 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு வழங்கப்பட்ட 1,114 முற்பணங்களில் 523 முற்பணங்கள் தொடர்பான முற்பணக் கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்கள் செயற்திட்ட அலுவலகத்தால் தீர்க்கப்பட்டுள்ளன. | காசுக் கொடுப்பனவை சரிபார்ப்பதற்குத் தேவையான துணை ஆவணங்களைச் (பற்றுச்சீட்டைகள், சிட்டைகள் போன்றவை) சேகரிக்க முறையான கட்டமைப்பு பராமரிக்கப்பட வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38 (1) (இ) இன் விதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வில் இதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| II | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின 02 (iv) ஆம் பந்தி | அனைத்துப் பொது நிறுவனங்களிலுமுள்ள அனைத்து அரச ஊழியர்களினதும் வருகை மற்றும் புறப்பாட்டு நேரங்கள் விரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலும், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவு போன்ற சாதாரண கடமை நேரங்களுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளுக்கான அடிப்படையாக வருகை மற்றும் புறப்பாட்டு நேரங்கள் பயன்படுத்தப்படுமாயின், அவ்வருகை மற்றும் புறப்பாடுகளும் விரல் அடையாள இயந்திரங்கள் மூலமே உறுதிப்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், மேற்படி சுற்றறிக்கைக்கு மாறாக, விரல் அடையாள இயந்திரம் மூலம் வருகை மற்றும் புறப்பாடுகளை உறுதிப்படுத்தாமல் மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகளாக ரூபா.2.87 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்கள் அலுவலகத்தினுள் மேலதிக நேரக் கடமைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில், அவர்களின் வருகை மற்றும் மேலதிக நேரங்கள் விரல் அடையாள வருகைப் பதிவு முறைமையின் மூலம் பதிவு செய்யப்படுகின்றன. இருப்பினும், அவர்கள் கள ஆய்வுகள் மற்றும் செயற்திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகளுக்காக அலுவலகத்திற்கு வெளியே ஈடுபடும் போது, அத்தகைய களக் கடமைகள் தொடர்பான மேலதிக நேரக் கொடுப்பனவுகள், மேற்பார்வை அதிகாரியாகச் செயல்படும் செயற்திட்டப் பணிப்பாளரினால் வழங்கப்படும் சான்றளிப்புகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட கடமைகளை மேற்கொண்ட காலப் பகுதிகளைத் செயற்திட்டப் பணிப்பாளர் சான்றளித்துள்ளதுடன், செயற்திட்டத்தின் செயல்பாட்டுத் தேவைகளுக்கு அமைவாக மேலதிக நேரக் கொடுப்பனவுகளும் முறைப்படி வழங்கப்பட்டுள்ளன. | பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் விரல் அடையாள இயந்திரத்தினால் வழங்கப்படும் வருகை மற்றும் புறப்பாட்டு நேரங்களின் அடிப்படையில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும். |
| III | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2024 ஒக்தோபர் 24 | செயற்திட்டத்திற்காக ஆண்டிற்கு மொத்தம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் | உள்ளக கணக்காய்வுச் செயல்பாட்டிற்கு தேவையான அதிகாரங்களை | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக உள்ளகக் கணக்காய்வுக் குழுவுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் திகதிய 02/2024 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் வெளியிடப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ வழிகாட்டுதல்களின் 6.4 ஆம் பிரிவு | குழுவுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். அவற்றுள் முதலாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளுக்கான இரண்டு கூட்டங்கள் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் தலைமையிலும், இரண்டாம் மற்றும் நான்காம் காலாண்டுகளுக்கான இரண்டு கூட்டங்கள் செயற்திட்டப் பணிப்பாளரின் தலைமையிலும் திட்டமிடப்பட வேண்டும். இருப்பினும், குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் இக்கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | வழங்குவதற்கு எடுத்த நேரத்தின் காரணமாகவே தாமதம் ஏற்பட்டது. பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக உள்ளகக் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு உள்ளகக் கணக்காய்வாளருக்கு தற்போது உத்தியோகபூர்வமாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, உள்ளகக் கணக்காய்வுச் செயல்பாடானது 2026 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக தேவையான கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |
| IV | இணைப்பு 1 இல் உள்ள கூறு 18: செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் அமுலாக்க ஒப்பந்தம் மற்றும் ஆதரவுத் திட்டம் | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின்படி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். இருப்பினும், குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு முறையான அதிகாரப் பகிர்வு அளிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, அறிக்கையிடல் காலத்தில் செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. அதனைத் தொடர்ந்து, இந்த அனுமதியை வழங்கியதைத் தொடர்ந்து பணிப்பாளர் நாயகத்தால் உள்ளகக் கணக்காய்வாளருக்குத் தேவையான அதிகாரம் வழங்கப்பட்டது. நடைமுறையிலுள்ள அரசாங்க விதிமுறைகள் | மதிப்பீட்டு ஆவணத்திற்கிணங்க உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

மற்றும் செயற்திட்டத் தேவைகளுக்கு அமைவாக செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வை நடத்துவதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்.

| . | கூறு | செயற்பாடு | 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | **எதிர்பார்க்கப் பட்ட பௌதீகு செயன்முன்னேற்றம் அலகுகள்** | **அடையப் பட்ட செயலாற்றல் அலகுகள்** | | |
| I | கூறு - 2 | **குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள், வியாபாரத் திட்டங்களைத் தயாரித்தல், தரவு சேகரிப்பு மற்றும் வழிகாட்டல் ஆலோசனை.**<br><br>(அச்சிடுதல், கலந்துரையாடல் கள், வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப உதவி உட்பட) | 8,231 | 4,553 | மீளாய்வாண்டில் 8,231 குடும்பங்களுக்கான தரவு சேகரிப்பு, குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல், வணிகத் திட்டங்கள் மற்றும் ஆலோசனைக் நடவடிக்கைகளுக்காக ரூபா. 4 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிக்குள் ஏறக்குறைய ரூபா. 2 மில்லியன் செலவில் 4,553 குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளின் அமுலாக்கச் செயன்முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விடக் குறைவாகவே காணப்பட்டது. | பயனாளிகளை அடையாளம் காணும் செயல்முறையில் தாமதம் ஏற்பட்டது. இதன் காரணமாகத் திட்டமிடப்பட்ட விழிப்புணர்வு திட்டங்களை முடிப்பதிலும், திட்டமிடப்பட்ட காலத்திற்குள் குடும்ப அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதிலும் தடங்கல் ஏற்பட்டது. |

**முகாமைத்துவத்தின் பதில்**

கட்டம் I இன் கீழ் 4,375 பயனாளிகள் மற்றும் கட்டம் II இன் கீழ் 6,600 பயனாளிகள் உட்பட மொத்தம் 10,975 பயனாளிகள் இத்திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்காவர். செயற்திட்ட அமுலாக்க கட்டம் I க்கு மட்டுமே வரையறையிருந்த போதிலும், பயனாளிகளை அடையாளம் காணும் செயல்முறை கட்டம் I இன் இலக்கை விட அதிகரித்திருந்ததுடன், அடையாளம் காணப்பட்ட அனைத்துப் பயனாளிகளுக்காகவும் குடும்ப அபிவிருத்தித் செயற்திட்டங்கள் வெற்றிகரமாகத் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.

அறிக்கையிடும் காலப்பகுதியில் கட்டம் II இன் கீழ் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் இன்னும் ஆரம்பிக்கப்படாததால், அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் பயன்படுத்தப்படவில்லை.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்**

செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை வெற்றிகரமாக அடைவதற்கு, முதன்மை நடவடிக்கை முறைப்படி திட்டமிடப்பட்டு பின்பற்றப்பட வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வில் இதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| II | கூறு - 2 | **உத்தியோகத்தர் களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங் கள்** | 1977 | 907 | மீளாய்வாண்டில் ரூபா.22 மில்லியன் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டில் ஊழியர்களுக்காக 1,977 பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ரூபா. 4 மில்லியன் செலவில் 907 பயிற்சித் திட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தின் ஆரம்பம் மற்றும் ஆரம்ப கட்ட அமுலாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதங்கள். |

**முகாமைத்துவத்தின் பதில்**

செயற்திட்டத்தின் ஆரம்பம், பயனாளிகளை அடையாளம் காணுதல் மற்றும் பிற ஆரம்ப கட்ட அமுலாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதங்கள், திட்டமிடப்பட்ட பயிற்சித் திட்டங்களின் கால அட்டவணை மற்றும் செயல்பாடுகளைப் பாதித்தன. இதன் காரணமாக, நடப்பாண்டில் பயிற்சிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ஆரம்ப மதிப்பீட்டை விடக் கணிசமாகக் குறைவாக இருந்தது. எனவே, பயிற்சி தொடர்பான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான செலவினங்களுக்கு இடையிலான வேறுபாட்டிற்கு, படிமுறைப் பயிற்சி உத்தியை கைக்கொண்டமை மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகளின் ஆரம்பத்தில் ஏற்பட்ட தாமதங்களே முக்கிய காரணங்களாகும். இவை திட்டமிடப்பட்ட பல பயிற்சித் திட்டங்களை திட்டத்தின் அடுத்தடுத்த கட்டங்களுக்கு ஒத்திவைக்க வழிவகுத்தன.

ஊழியர்களுக்கான பயிற்சித் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| III | கூறு - 2 | **நலனாளிகளுக்கா ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங் கள்** | 28,482 | 8,157 | தாக்க மதிப்பீடு நடத்தப்படாத அம்பாறை, பதுளை, கொழும்பு, மன்னார், மொணராகலை, இரத்தினபுரி | அமுலாக்கத் தாமதங்கள் மற்றும் அதன் தொடர்ச்சியாக |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மற்றும் வவுனியா ஆகிய ஏழு மாவட்டங்களின் அடிப்படையில், மீளாய்வாண்டில் ரூபா. 20 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவில் பயனாளிகளுக்காக 28,482 பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், 2025 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி, ஏறக்குறைய ரூபா. 3 மில்லியன் செலவில் 8,157 பயிற்சித் திட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, திட்டமிடப்பட்ட பயிற்சித் திட்டங்களை அமல்படுத்துவதிலான முன்னேற்றம் 29 சதவீதம் என்ற குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. | எடுக்கப்பட்ட முகாமைத்துவ முடிவுகள் காரணமாகத் செயற்திட்ட நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டன. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | குறிப்பாக வணிகத் திறன் அபிவிருத்தி மற்றும் மேம்பட்ட நிதி அறிவுத் திறன் தொடர்பான சில திட்டமிடப்பட்ட கட்டாயப் பயிற்சித் திட்டங்கள், அவற்றிற்குரிய பயிற்சித் தொகுதிகள் , பாடத்திட்டங்கள் ஆகியவை இன்னும் உருவாக்கப்பட்டு இறுதி செய்யப்படாததனால், அறிக்கையிடும் காலப்பகுதிக்குள் அவற்றை நடத்த முடியாமல் போனது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** | பயனாளிகளுக்கான பயிற்சித் திட்டங்களை விரைவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| IV | **கூறு** - 2 | **பயனாளிகளுக்கான நிதி உள்ளடக்கல் மானியங்களை பரிமாற்றுதல்.** | 5,250 | 1,114 | மீளாய்வாண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தின் படி, 5,250 பயனாளிகளை வலுவூட்டுவதற்காக ரூபா. 788 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், 1,456 பயனாளிகளிடமிருந்து மட்டுமே வணிகத் திட்டங்கள் பெறப்பட்டிருந்தன. இவர்களில், 1,114 பயனாளிகளுக்கு தலா ரூபா. 150,000 வீதம் மொத்தம் ரூபா. 167.1 மில்லியன் நிதியுதவி 2025 திசெம்பரில் விடுவிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் நிதி வழங்கப்பட்டதால், அவ்வாண்டில் பயனாளிகளின் | திக்வா சூறாவளியின் தாக்கங்கள் மற்றும் மானியக் கூறுக்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம். |

வாழ்வாதார நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் செயல்திறனை முறைப்படி கண்காணிக்க முடியாமல் போனது. மேலும், நிதியுதவி பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை, இத்திட்டத்தின்கீழ் வலுவூட்டப்படும் என எதிர்பார்க்கப்பட்ட மொத்த பயனாளிகளின் எண்ணிக்கையில் 21 சதவீதம் மட்டுமே என்பதை கணக்காய்வு அவதானித்தது.

**முகாமைத்துவத்தின் பதில்**

வருடாந்த செயல்பாட்டுத் திட்டத்தின கீழ், ஒக்டோபர் மாதம் முதல் பயனாளி ஒருவருக்கு ரூபா. 150,000 வீதம் வணிக மானியங்களை வழங்க ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், வணிக மானியக் கூறுக்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரம் ஒக்டோபர் மாதத்திலேயே பெறப்பட்டது, இதனால் அமுலாக்கத்தில் தாமதம் ஏற்பட்டது.

மேலும், வணிகத் திட்டங்களின் தொழில்நுட்பத் தன்மை மற்றும் சிக்கல் தன்மை காரணமாக அவற்றைத் தயாரிப்பதிலும் மதிப்பீடு செய்வதிலும் கணிசமான கவனம் செலுத்த வேண்டியிருந்தது. சாத்தியமான வணிகத் திட்டங்களை உருவாக்குவதில் தொழில்நுட்ப அதிகாரிகளிடமிருந்து பயனாளிகள் ஆதரவைப் பெற்றதுடன், முன்மொழியப்பட்ட வணிக நடவடிக்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் நிலையான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மீளாய்வு மற்றும் அங்கீகார செயல்முறைக்கு விரிவான மதிப்பீடு தேவையாக இருந்தது. இதன் விளைவாக, வணிகத் திட்டங்களைச் சமர்ப்பித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் அங்கீகரித்தல் ஆகியவற்றுக்கு ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதை விடக் கூடுதல் காலம் எடுத்தது.

இதற்கு மேலாக, திக்வா சூறாவளியின் தாக்கங்கள் குறித்த மதிப்பீட்டைத் தொடர்ந்து, பதுளை, மன்னார் மற்றும் கொழும்பு கொலோன்னாவ உள்ளிட்ட பாதிக்கப்பட்ட பகுதிகளில் வணிக மானியங்களை விடுவிப்பது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. இதன் காரணமாக, திட்டமிடப்பட்ட காலக்கெடுவுக்குள் அமுலாக்க இலக்குகளை அடைய முடியாமல் போனது.

பயனாளிகளால் நிதியானது திறம்பட மற்றும் நோக்கம் கருதிப் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காகத் செயற்திட்டம் ஒரு விரிவான பொறிமுறையை நிறுவியுள்ளது. இப் பொறிமுறையின் கீழ், வணிக மானியங்கள் முற்பணங்களாக வழங்கப்படுவதுடன், அங்கீகரிக்கப்பட்ட வணிக நடவடிக்கைகளுக்காகக் பெறுகை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான பற்றுச்சீட்டுக்கள், சிட்டைகள் மற்றும் பிற ஆதரவு ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் நிதியின் பயன்பாட்டைப் பயனாளிகள் கணக்குக் காட்ட வேண்டும்.

| | |
|---|---|
| **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** | பயனாளிகளுக்கான நிதி மானியங்களை உரிய நேரத்தில் பரிமாற்றம் செய்வதை உறுதிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வில் இதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| V | கூறு - 2 | **கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு** | 474 | 340 | அதிகாரமளித்தல் செயற்திட்டத்தின் செயல்பாட்டு கையேட்டின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கண்காணிப்புக் கட்டமைப்பின் படி, கண்காணிப்பு நடவடிக்கைகள் செயற்திட்ட மட்ட கண்காணிப்பு மற்றும் குடும்ப மட்ட கண்காணிப்பு என இரண்டு முக்கிய கூறுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன: குடும்ப மட்ட கண்காணிப்பானது குடும்ப வாழ்வாதார கண்காணிப்பு மற்றும் குடும்ப நலன் சார்ந்த கண்காணிப்பு என மேலும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில், செயல்பாட்டு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா. 15 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 474 செயற்திட்டங்களை நடத்துவது இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரை, ரூபா. 1 மில்லியன் செலவில் 340 செயற்திட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டிருந்தன. கூடுதலாக, மாவட்ட, பிரதேச மற்றும் கிராம உத்தியோகத்தர் மட்டங்களில் 118 கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், அதே மட்டங்களில் 211 கண்காணிப்பு விஜயங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | குறிப்பிட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான பிரத்தியேக முழுநேர ஊழியர்களின் வரவின்மை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேலும், பயனாளிகளுக்கு ரூபா. 167.1 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்தபோதிலும் , வழங்கப்பட்ட மானியங்கள் உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா, நிதி ஒருங்கிணைப்பு வழிமுறைகள் பயனாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கின்றனவா மற்றும் எதிர்பார்க்கப்பட்ட திட்ட முடிவுகள் அடையப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கான வழக்கமான கண்காணிப்பு நடவடிக்கைகள் திறம்பட நடத்தப்பட்டிருக்கவில்லை. | |

**முகாமைத்துவத்தின் பதில்** தற்போது, கூகிள் அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் அறிக்கை முறையின் மூலம் செயற்திட்ட மட்ட முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மீளாய்வாண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் செய்யப்பட்டுள்ளதுடன், செயற்திட்ட மட்ட முன்னேற்றக் கண்காணிப்பு தற்போது திறம்படத் தொடங்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளது. பயனுள்ள மேற்பார்வை, பொறுப்புக்கூறல் மற்றும் செயற்திட்ட நோக்கங்களை அடைவதை உறுதி செய்வதற்காக, செயற்திட்ட மேலாண்மையானது செயற்திட்ட மட்டம் மற்றும் குடும்ப மட்ட கண்காணிப்பு வழிமுறைகள் இரண்டையும் தொடர்ந்து மேம்படுத்தும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** திட்டமிட்டபடி செயற்திட்டத்தின் விரும்பிய நோக்கங்களை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் விதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| VI **கூறு** - 2 **தாக்க மதிப்பீடு** | - | - | இத்திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் 12 மாவட்டங்களில் 5 மாவட்டங்களில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டது. இந்த ஐந்து மாவட்டங்களுக்குட்பட்ட 79 பிரதேச செயலகப் பிரிவுகளில் 44 பிரிவுகளையும், 352 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இவற்றுள் 264 கிராம | பல செயல்பாட்டு மற்றும் நிர்வாகக் காரணிகளால் கணக்கெடுப்பு நிறுவனமொன்றைக் பெறுகை செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. |

உத்தியோகத்தர் பிரிவுகள் செயற்திட்ட அமுலாக்கத்தில் சேர்க்கப்பட்டதுடன், செயற்திட்டத்தில் உள்வாங்கப்படாத எஞ்சிய 88 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் நோக்கத்திற்காகக் கட்டுப்பாட்டுக் குழுக்களாக ஒதுக்கப்பட்டன.

செயற்திட்டப் பகுதிகளில் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் தாக்கம்-சாராத முறைமை பின்பற்றப்பட்டது. அதன்படி, “அஸ்வெசும“ திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏழை மற்றும் அதிதீவிர ஏழைக் குடும்பங்களிலிருந்து குறைந்தபட்ச வசதிகளைக் கொண்ட 25 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த ஏற்பாட்டின் கீழ் 6,600 பயனாளிகள் செயற்திட்டப் பலன்களைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டதுடன், 2,200 குடும்பங்கள் கட்டுப்பாட்டுக் குழுவில் சேர்க்கப்பட்டனர். தாக்க மதிப்பீட்டுக் கணக்கெடுப்பை நடத்துவதற்காக ரூபா. 20 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இம்மதிப்பீட்டை வடிவமைப்பு செய்து அமுல்படுத்துவதற்குத் தகுதியும் அனுபவமும் கொண்ட ஒரு வெளிவாரி ஆலோசகரை நியமிக்கத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்நடவடிக்கைகள் உத்தேசித்தபடி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பெறுகை செயல்முறை மற்றும் ஆலோசனைப் பணியின் அமுலாக்கத்தை இலகுபடுத்துவதற்காக 2024 முதல் 2027 வரையிலான காலப்பகுதிக்கான எதிர்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் கட்டம் கட்டமாகக

தயாரிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடைய இச்செயல்முறை சரியாகச் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரை, தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கு இத்திட்டம் மற்றும் அதன் எதிர்பார்க்கப்படும் முடிவுகள் குறித்து அறிவிக்கவோ, விழிப்புணர்வூட்டவோ அல்லது வலுவூட்டவோ பயனுள்ள நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**முகாமைத்துவத்தின் பதில்**

செயற்திட்டத்திற்குத் தேவையான ஆரம்பக்கட்டக் கணக்கெடுப்பை நடாத்துவதற்கு வெளிப்புற நிறுவனமொன்றைக் பெறுகை செய்வதற்காக 2025 ஆம் ஆண்டில் ரூபா. 20 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்தின் களத் தரவுகளைச் சேகரிப்பதோடு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. கணக்கெடுப்புத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதும் இறுதி அறிக்கையைத் தயாரிப்பதும் திணைக்களம், உலக வங்கி, ஐக்கிய இராச்சியத்தின் டிரினிட்டி கல்லூரி மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் கூட்டாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இக்கட்டுப்பாட்டைக் கண்டறிந்து, பெறுகை சார்ந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கவும் ஒருங்கிணைக்கவும் ஒரு அதிகாரியை நியமிக்கும் பணியை செயற்திட்டம் தற்போது நிறைவு செய்துள்ளது. இதன் மூலம் எதிர்காலத்தில் இதுபோன்ற நடவடிக்கைகளைத் திறம்பட நிர்வகிப்பதற்கான செயற்திட்டத்தின் திறன் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, கடந்த ஆண்டின் மூன்றாவது காலாண்டில், மாவட்ட மட்டத்தில் தாக்க மதிப்பீட்டு ஆய்வு தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க ஒரு பிரத்தியேக அதிகாரியை நியமிக்க தீர்மானிக்கப்பட்டது. அதன்பின்னர் ஆட்சேர்ப்பு செயல்முறை நிறைவுற்று, அந்த அதிகாரி தற்போது கணக்கெடுப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கு ஆதரவளித்து வருகிறார்.

தற்போது, திட்டமிட்டபடி கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறதுடன், களத் தரவு சேகரிப்பு முன்னேறி வருகிறது. கணக்கெடுப்புப் பணிகள் யூன் மாதத்திற்குள் முடிவடையும் என அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே 50% தரவு சேகரிப்பு நிறைவடைந்துள்ளது. அதனைத் தொடர்ந்து, தரவு பகுப்பாய்வு, அறிக்கை தயாரித்தல் மற்றும் தாக்க மதிப்பீடு தொடர்பான அடுத்தடுத்த திட்ட நடவடிக்கைகள் தொடங்கும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** தகுதியும் அனுபவமும் கொண்ட ஒரு வெளிவாரி ஆலோசகரை நியமிக்கவும், தாக்க மதிப்பீட்டுக் கணக்கெடுப்பை நடத்தவும் திட்டம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| VII | **கூறு** - 2 | **குறைதீர்ப்பு பொறிமுறை அல்லது முறையீடுகளைக் கையாளும் பொறிமுறை** | 548 | 1 ரீஓரீ நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 2 ஜூம் அமர்வுகள். | குறைதீர்க்கும் முறைமை குறித்து அதிகாரிகளுக்குக் கற்பிப்பதற்காக, பரிசீலிக்கப்பட்ட ஆண்டில் ரூபா. 1 மில்லியன் மதிப்பீட்டுச் செலவில் 548 விழிப்புணர்வு மற்றும் பயிற்சித் திட்டங்களை நடத்த அமுலாக்கத் திட்டத்தின்படி எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், சமனலவெவ பயிற்சி மையத்தில் 12 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளுக்காக ஒரு பயிற்சித் திட்டம் மட்டுமே நடத்தப்பட்டதுடன், அதே மாவட்டங்களுக்காக ஜூம் தொழில்நுட்பம் மூலம் இரண்டு மேலதிக அமர்வுகள் மட்டுமே நடத்தப்பட்டன. | சமூகப் பாதுகாப்பு நிபுணர் நியமிக்கப்படாததால் இத்தாமதம் ஏற்பட்டது. |

**முகாமைத்துவத்தின் பதில்** இந்த வரவுசெலவுத் தலைப்பின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடு, குறைதீர்க்கும் முறைமையை நிறுவுவதற்கும் இயக்குவதற்கும் மட்டுமல்லாமல், திட்ட அமலாக்கத்தால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கங்களைக் குறைப்பது அல்லது இல்லாது செய்வதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டது. அதற்கமைய, குறைதீர்க்கும் முறைமையைத் தயாரித்தல், விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள் மற்றும் அது தொடர்பான தொடர்புப் பொருட்கள் போன்ற தகவல் பொருட்களை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பங்குதாரர்களின் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும், குறைதீர்க்கும் செயன்முறையின் அணுகல் மற்றும் செயல்திறனை உறுதிப்படுத்துவதற்கும் குறைதீர்க்கும் முறைமை தொடர்பில் முறையான விழிப்புணர்வு மற்றும் தொடர்புத் திட்டம் எதிர்காலத்தில் செயல்படுத்தப்படும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** குறைகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக விழிப்புணர்வு மற்றும் பயிற்சித் திட்டங்கள் திட்டமிட்டபடி நடத்தப்பட வேண்டும்.

### 3.2 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்.

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|
| I | 2025 திசெம்பர் 31 ஆம் திகதியிலான நிதி பயன்பாட்டின் | அறிக்கையிடல் காலத்தில் நிதி குறைவாகப் பயன்படுத்தப்பட்டமைக்கு, திட்ட அமலாக்கத்தின் ஆரம்பக் | செயற்திட்டமானது சரியான செயல்பாட்டு நடவடிக்கைத் திட்டம் |

| | | | |
|---|---|---|---|
| | முன்னேற்றத்தைக் கருத்திற்கொள்ளும்போது, உலக வங்கிக் கடனின் மொத்த ஒதுக்கீடான 8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் செயற்திட்டமானது 0.10 மில்லியன் அமெரிக்க டொலர்களை அல்லது 1.25 சதவீத நிதியை மட்டுமே பயன்படுத்தியுள்ளது அவதானிக்கப்பட்டது. எனவே, மீதமுள்ள நிதியுடன் மிகுதி 21 மாத காலப்பகுதியைக் கருத்திற்கொள்ளும்போது நிதி பயன்பாடானது திறனற்றதாக உள்ளது. | கட்டங்களில் ஏற்பட்ட தாமதங்களே முக்கியக் காரணமாகும். ஒதுக்கப்பட்ட நிதியின் கணிசமான பகுதி பயனாளிகளுக்கு வணிக மற்றும் வணிகம் அல்லாத மானியங்களை வழங்குவதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்ட வடிவமைப்பு நடவடிக்கைகள், செயல்பாட்டு வழிகாட்டுதல்களைத் தயாரித்தல், பயிற்சிக் பாடத்திட்டங்கள் மற்றும் கையேடுகளை உருவாக்குதல், தேவையான அனுமதிகளைப் பெறுதல் மற்றும் திறம்பட அமல்படுத்துவதற்குத் தேவையான பிற ஆயத்த நடவடிக்கைகளை நிறைவு செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான நேரம் காரணமாகத் செயற்திட்டத் தொடக்கம் தாமதமானது.<br>கூடுதலாக, ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட சூறாவளியின் பாதகமான வினைவால் பல பகுதிகளில் திட்ட அமலாக்கத்தைப் பாதித்ததுடன், மானியங்களை விடுவிப்பதிலும் அறிக்கையிடல் காலத்திற்குள் திட்டமிட்ட இலக்குகளை அடைவதிலும் தற்காலிக தாமதங்களை ஏற்படுத்தியது.<br>மேலும், பயனாளிகளுக்கான பயிற்சிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி குறைவாகப் பயன்படுத்தப்பட்டமைக்கு, பயிற்சிக்கான நிதியை நேரடியாக மாவட்டங்களுக்கு விடுவிப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான வழிமுறை இல்லாததும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பயிற்சி நடவடிக்கைகள் நடத்தப்பட்ட போதிலும், மூலச் செலவின வழிமுறையைத் திறம்படச் செயல்படுத்த முடியவில்லை. ஒரு திருத்த நடவடிக்கையாக, தகுதியான பயிற்சிச் செலவுகளை சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் மூலம் மறுபயனளிப்பு செய்வதை திட்டம் தற்போது ஊக்குவித்து வருகிறதுடன், எதிர்காலத்தில் இவ்வழிமுறையைப் பயன்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். | மற்றும் வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்பதுடன், அதற்கேற்ப பொறுப்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் விதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |
| II | சமூகப் பாதுகாப்புத் செயற்திட்டத்திற்காக இலங்கை அரசாங்கம் வழங்குவதற்கு ஒப்புக்கொண்ட மொத்த பங்களிப்பு ரூபா. 260 | செயற்திட்டத்தின் நிர்வாக மற்றும் செயல்பாட்டுச் செலவுகளை ஈடுசெய்வதற்காக 2025 ஆம் ஆண்டிற்கு ரூபா.120 மில்லியனும், 2026 ஆம் ஆண்டிற்கு ரூபா.38 | முறையான செயல்பாட்டுத் திட்டம் மற்றும் வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், |

மில்லியன் ஆகும். ஆனால் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி வரை அரசாங்க நிதியின் ஒட்டுமொத்தப் பயன்பாடு ரூபா. 5.61 மில்லியன் மட்டுமே என்பதுடன், இது ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையில் 2.16 சதவீதத்திற்குச் சமமானதாகும். ஒப்புக்கொள்ளப்பட்ட அரசாங்க நிதியில் மீதமுள்ள 97.8 சதவீதத்தை ஆண்டில் பயன்படுத்துவது நிச்சயமற்றதாக உள்ளது.

மில்லியனும், 2027 ஆம் ஆண்டிற்கு ரூபா.19 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த நிதியானது அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட அமுலாக்கத் திட்டத்திற்கு அமைவாக அந்தந்த மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன், களமட்ட அமுலாக்கம், கண்காணிப்பு, மேற்பார்வை, ஒருங்கிணைப்பு மற்றும் பிற நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப பொறுப்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் விதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.